Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 294/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகானந்தம் | Father Name | : | பால்ராஜ் |
| Village | : | கார்த்திகைத் தோட்டம் | Taluk | : | பாபநாசம் |
| Age | : | 53 | Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எனது இரண்டாவது மகன் அருண்குமார் வயது 21 ஆகிறது. அவர் கடந்த 3, 4 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நியாபகமில்லை காலையில் 08.30 மணியளவில் நான் கார்த்திகை தோட்டத்தில் ஒரு இடத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு ஒரு நபர் தொடர்பு கொண்டு எனது மகனுக்கு வாகன விபத்து ஏற்பட்டு அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு சென்று பார்த்தபோது எனது மகன் மயக்க நிலையில் இருந்தார். என் மகனை லெட்சுமணன், வினோத், கண்ணதாசன் ஆகியோர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சையில் சேர்த்துள்ளார்கள். அவர்களிடம் நான் விசாரித்தபோது உத்தாணி

அருகில் மேற்கு நோக்கி சருக்கை என்ற ஊருக்கு வேலைக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளார். அவர் எதிரே வந்த அரசு பேருந்து மோதிவிட்டதாக கூறினர். 108 ஆம்புலன்ஸில் முதலில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் முதலுதவி எடுத்துக்கொண்டு மேல் சிகிச்சைக்காக அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம் என்று கூறினார்கள். எனது மகன் 10 நாட்கள் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகு செலவு அதிகமானதால் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு மருத்துவர்கள் அவருக்கு இடது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு சிகிச்சை அளித்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் எனது மகனை தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்த்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் மேற்படி ஆவணங்கள் என்னிடம் உள்ளது. எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது மகன் உத்தாணியில் இருந்து பாபநாசம் - கும்பகோணம் மெயின்ரோட்டில் மேற்கு நோக்கி இடது புறமாக சென்றார் என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச் சென்ற வாகனத்தின் இடது புறம் பம்பர் சேதமடைந்திருந்தது என்றால் சரிதான். எனது மகன் ஓட்டி சென்ற வாகனத்தின் RC Book, இன்சூரன்ஸ் ஆகியவற்றை நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் எந்த பக்கம் சேதமடைந்திருந்தது என்று நான் பார்த்தேனா என்றால் இல்லை. விபத்து பற்றிய விபரங்கள் அனைத்தும் நான் கேட்டு தெரிந்துகொண்டது தான் எனக்கு நேரடியாக விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். எனது மகன் உத்தாணியிலிருந்து பாபநாசம் - கும்பகோணம் மெயின்ரோட்டில் மேற்கு நோக்கி இடது புறமாக சென்று கொண்டிருந்தபோது திடீரென்று ரோட்டின் குறுக்கே வலது புறமாக கடக்க

முயலும்போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. சம்பவயிடத்திற்கு மேற்கு புறம் பள்ளிக்கூடம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து பேருந்து ஓட்டுநரின் அஜாக்கிரதையாலோ அதிவேகமாக ஓட்டியதாலோ ஏற்படவில்லை என்றாலும் எனது மகன் சாலையை குறுக்கே கடக்கும்போதுதான் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.11 14:58:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.